செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 389 நாள் : 04/07/17

# பத்திரிக்கைச் செய்தி

வேலூர் மாவட்டத்தில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12 (1) (சி)ன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% இட ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கான சேர்க்கை இணைய வழியாக மேற்கொள்ளப்பட்டு கடந்த 31.05.2017 மற்றும் 20.06.2017 அன்று இணையதள வழியாக விண்ணப்பித்தவர்களுக்கு 25% இடஒதுக்கீட்டில் சேர்க்கை நடைப்பெற்ற நிலையில் மீளவும் சில பள்ளிகளில் காலியாகவுள்ள இடத்திற்கு இரண்டாம் கட்டமாக இணையதள வழியாக சேர்க்கை வேண்டி விண்ணப்பிக்க 03.07.2017 முதல் 25.07.2017 வரை இணையதள வழியாக பதிவேற்றம் செய்யலாம். மேலும் தாலுக்கா அலுவலகங்களில் உள்ள இ–சேவை மையங்களிலும் மற்றும் www.dge.tn.gov.in என்ற இணைதள முகவரியிலும் விண்ணப்பிக்கலாம். ஆன்லைனில் பதிவு செய்ய தேவைப்படும் ஆவணங்கள்

1. இருப்பிடச் சான்று ( குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை)
2. வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கான சாதிச் சான்று மற்றும் இதர சான்று
3. ஆண்டு வருமானச் சான்று (இதர வகுப்பினருக்கு மட்டும்)
4. பிறப்பு சான்று

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.